வாழ்க்கையை வெற்றிகொள்ள

பாடத்தில் தேர்ச்சி பெறுங்கள்

சேமிக்கும்
வழி

011 244 8888 | www.ndbbank.com

NDB வங்கி
எங்கள் அர்ப்பணிப்பு. உங்கள் வெற்றி.

சேமிப்பு எனும் திறமை

சேமிப்பு என்பது ஒரு திறமையாகும். தேர்ச்சியடைய வேண்டியதொரு பாடமாகும். ஆரம்பிப்பது எவ்வளவு சிரமமாயிருந்தாலும், எவ்வளவுதான் தடைகளிருந்தாலும், கைவிடாமல் முயற்சி செய்து சேமிப்பு பாடத்தைச் சிறப்பாகப் படித்தால், சித்தியடையவும் முடியும்! தேர்ச்சி பெறவும் முடியும்!

சேமிப்பு என்பது பணத்தை சேமிப்பது மட்டுமே இல்லை. நாள்தோறும் நீங்கள் பயன்படுத்தும் எல்லாவற்றையும் அதீத பாவனையில் இருந்து குறைந்தளவு பாவனைக்கு மாற்றினால், அதுவும் சேமிப்பு தான். இந்தக் கையேடு மூலமாக நீங்கள் சேமிக்கக் கூடிய வாய்ப்புகளைப் பற்றியும் சேமிப்பின் முக்கியத்துவம் பற்றியும் அறிய முற்படுவீர்கள்.

- **நீர்**
- **மின்சாரம்**
- **எரிபொருள்**
- **சுற்றுச்சூழல்**
- **தொலைபேசி**
- **ஆரோக்கியம்**
- **உணவு**
- **நேரம்**
- **பணம்**

ஆகிய மேற்குறிப்பிட்ட அம்சங்களில் சேமிப்பினைப் பின்பற்ற முடியுமெனில், அவ்வண்ணமே பணம் சேமிப்பதன் முக்கியத்துவத்தை நீங்கள் உணர்ந்துகொள்ளும் போது, நாட்டின் அபிவிருத்திக்கு ஏதுவானதொரு சூழலை உருவாக்கித்தரவும் உங்களால் முடியும். அதுமட்டுமல்லாது சேமிப்புப் பழக்கத்தில் நீங்கள் தேர்ச்சி அடையும் போது உங்களால் உங்கள் குடும்பத்தின் பொருளாதார நிலையும் மன நிம்மதியும் பலம்பெறும் வழி ஏற்படுகிறது.

நினைவில் கொள்ளுங்கள்

சேமிப்பு என்பது பெரும் சிரமமான காரியம் அல்ல என்பதை முதலில் நினைவில் கொள்ளுங்கள். உங்கள் தினசரி வாழ்வில், சில பழக்கவழக்கங்களை கடைபிடிப்பதன் மூலம் சேமிப்பினை மேற்கொள்ள முடியும். இந்தக் கையேட்டின் ஊடாக அத்தகைய பழக்கவழக்கங்களை உங்களுக்கு அறிமுகம் செய்து, சேமிப்பின் வழி தொடர்பான விழிப்புணர்வை உங்களிடம் ஏற்படுத்தவும் உங்களை சுற்றியும் இருக்கும் பொருளாதாரத் தடைகளை களைவதற்கும் முற்படுகிறோம்.

1. மனதைத் தயார்ப்படுத்தல்
2. சேமிக்கும் திறனை கற்றறிதல்
3. இலக்குகளை நிர்ணயித்தல் மற்றும் அவற்றை நோக்கிச் செயற்படுதல்
4. திறனில் தேர்ச்சியடைதல்
5. பிறர் பயனுற உதவி செய்தல்

1 மனதை தயார்ப்படுத்தல்

அடிப்படையில் பணத்தினை நிர்வகிப்பது என்பது தொடர்பில் நாம் என்ன செய்ய வேண்டும் என்று எம்மில் அநேகமானோருக்குத் தெரியும். இருப்பினும், நல்ல பழக்கங்களை தொடர்ச்சியாக நிலைநிறுத்துவது என்பது எளிதான காரியமல்ல. வாழ்க்கையில் பல முக்கியமான விடயங்களைப் போலவேதான் பணத்தினை நிர்வகிப்பதற்கும் ஒழுக்கத்துடனான கட்டுப்பாடு தேவைப்படுகிறது. அதிர்ஷ்டவசமாக, அத்தகைய ஒழுக்கத்தை கடைப்பிடிக்க மிகச் சுலபமான வழிகளை நாம் சிந்தித்தாலே போதும். எளிதில் அதை நடைமுறைக்கும் கொண்டுவரலாம்.

01 சேமிப்பு ஏன் முக்கியமானது என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

உங்கள் நிதி இலக்குகளைப் புரிந்து கொள்ள நேரத்தை கொஞ்சம் ஒதுக்குங்கள். நீங்கள் விடுமுறையொன்றை கழிப்பதற்காகவா சேமிக்கிறீர்கள்? அல்லது வாகனம் ஒன்றை வாங்கவா? அல்லது ஒருவேளை நீங்கள் உங்கள் எதிர்கால நிதித்தேவைக்கு என சேமிக்க நினைக்கின்றீர்களா? உங்கள் நோக்கம் எதுவாக இருப்பினும், சேமிப்பின் மூலமாக நீங்கள் அடைய விரும்பும் இறுதி இலக்கில் கவனம் செலுத்துங்கள்.

02 செலவுகளை முன் ஆயத்தம் செய்து கொள்ளுங்கள்.

உங்களுக்கான மாதாந்த செலவுக்கு எவ்வளவு தொகை தேவைப்படுமோ அதை முன்கூட்டியே அறிந்து அதற்குரிய பணத்தை கையாளுங்கள். முன்யோசனையோடு செலவு செய்தால் பணத்தை மீதப்படுத்தவும் முடியும் தானே.

03 கையில் பணம் அதிகம் கிடைக்கும் வேளையில், உங்கள் செலவுகளை அதிகரிக்க வேண்டாம்.

உங்கள் கையில் பணம் அதிகம் கிடைத்தால், கூடவே செலவை அதிகரிக்கும் வாய்ப்பும் வரலாம். ஆனாலும் நீங்கள் கவனமாக இருந்தால் அதீத செலவை தவிர்க்கலாம். ஒருவேளை அதிகமாக கிடைக்கும் பணத்தை உங்கள் சேமிப்பின் வழி திருப்பினால், சேமிப்புப் பணம் கையில் அதிகரிக்கும் தானே! உங்கள் தேவைக்கு பின்னாளில் அது உதவுமே. சிந்தியுங்கள்!

04 விருப்பங்களையும் தேவைகளையும் வேறுபடுத்திப் பாருங்கள்.

அத்தியாவசிய தேவைகள் எதுவோ முதலில் அதை நிறைவுசெயுங்கள். பின்னர் இடமிருந்தால் விருப்பத் தெரிவுக்கு கொஞ்சம் செலவு செய்யலாம். மற்றும் மாதம் முடியும்போது உங்கள் செலவை கணக்கிட்டு பார்த்தால், விருப்பங்களையும் தேவைகளையும் நிறைவேற்றிய விதத்தை ஒப்பிட்டு பார்த்து உங்களை நினைத்து நீங்களே பெருமைப்படலாம்.

05 சேமிப்பினை சுவாரஸ்யமான விளையாட்டாய் ஆடிப்பாருங்கள்.

சேமிப்பை ஒரு தவம் போல செய்யவேண்டியதன் அவசியமென்ன? அது ஒரு வினோதமான விளையாட்டாய் ஆடிப்பார்த்தால் தானே சுவாரஸ்யம் தெரியும். உங்கள் நண்பர்களுக்கு இடையே ஒரு போட்டி போல வைத்துகொண்டு வருடத்தின் ஒவ்வொரு வாரமும் நீங்கள் சேமிக்கும் அளவை பட்டியலிடுங்கள். போட்டியில் வெல்லும் மோகம் உங்களை அறியாமலேயே வளரும்.

நீங்கள் Vs 52 வாரங்கள் – சவாலுக்கு தயாரா?

தனியாகவோ, நண்பர்கள் அல்லது குடும்பத்துடனோ இணைந்துகொள்ளுங்கள். வருடத்தின் 52 வாரங்கள் எனும் சவாலை போட்டியாக நினைத்து வினோதமான ஒரு விளையாட்டினை ஆடிப்பாருங்கள்!



எப்படி தயாராகலாம்?

முதல்வார சேமிப்பில் குறைந்தது 100/- ரூபாய் பணத்தை சேமிக்க பாருங்கள். அடுத்த வாரம் அதை விட அதிகம் சேமியுங்கள். பிறகு வாராவாரம் உங்கள் முந்தைய வார சவாலை நீங்களே முறியடித்து 52வது வாரத்தில் உங்களின் வெற்றியை அறிவியுங்கள்! முயன்று பாருங்கள்! திட்டமிட்டு தீர்க்கமாக முன்னேறுங்கள்!

வாரம்	எனது சேமிப்பு	உங்கள் சேமிப்பு	வாரம்	எனது சேமிப்பு	உங்கள் சேமிப்பு

இந்தக் கையேட்டை இன்னுமொரு நண்பருக்கு கையளிக்கையில் உறுதியான சேமிப்பிற்காக நீங்கள் பின்பற்றிய புதிய வழிமுறைகளை குறிப்பிட்டு கையளிக்கலாம்.

----

2 சேமிக்கும் திறனைக் கற்றறிதல்

- மின்சாரத்தை சேமிக்கும் வழி
- நீரினை சேமிக்கும் வழி
- எரிபொருளை சேமிக்கும் வழி
- சுற்றுச் சூழலை சேமிக்கும் வழி
- தொலைபேசி செலவுகளை சேமிக்கும் வழி
- உடல் ஆரோக்கியத்தை சேமிக்கும் வழி
- உணவினை சேமிக்கும் வழி
- நேரத்தை சேமிக்கும் வழி
- பணத்தினை சேமிக்கும் வழி

மின்சாரத்தை சேமிக்கும் வழி

உங்களுக்குத் தெரியுமா ?

ஒவ்வொரு மாதமும் எங்களை அறியாமலேயே 5-10% அளவிலான மின்சக்தியை வீண்விரயம் செய்கிறோம்.

- முடிந்தவரை பகல் நேரங்களில் இயற்கையாக கிடைக்கும் சூரிய ஒளியை பயன்படுத்திக் கொள்ளுங்கள். இதன்மூலம் சுகாதார நலன்களும் கிடைக்கும், மின்சாரமும் சேமிக்கப்படும்.
- வாசிப்பைப் போன்ற நீங்கள் அதிக கவனமெடுக்கும் வேலைகளை மேற்கொள்ளும் இடங்களில் அதிகளவில் பிரகாசமான மின்குமிழ்களையும் ஏனைய இடங்களில் குறைந்தளவில் பிரகாசமான மின்குமிழ்களையும் பயன்படுத்தவும்.

- 3 அல்லது 4 டிகிரி வெப்பநிலையை குளிரூட்டிகளிலும், -15 தொடக்கம் -10 டிகிரிகளில் உங்கள் அதி குளிரூட்டி பிரீசர்களையும் பயன்படுதுங்கள். மின்சாரமானது மிகப்பெரிய அளவில் உங்கள் குளிரூட்டியின் மூலமாகத்தான் விரயமாகின்றது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.
- குளிர்சாதனப் பெட்டியினைத் தவிர ஏனைய அனைத்து மின் உபகரணப் பொருட்களையும் (தொலைக்காட்சி உட்பட) அவை பயன்பாட்டில் இல்லாத போது, அவற்றுக்கு மின் இணைப்பினை வழங்கும் சுவிட்ச் ஆளியினை அணைத்து விடவும்.
- அறையை விட்டு வெளியேறும் சமயம், மின்விசிறிகளையும் விளக்குகளையும் அணைப்பதை உறுதி செய்யவும். இப்பயிற்சியானது உங்கள் மின்சாரத்தில் 0.5%ஐ சேமிக்க உதவுகிறது.
- LED மின்விளக்குகளை எங்கு வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். அவை மின்சாரத்தை 30% வரை சேமிக்க உதவுகிறது.
- அவ்வப்போது உங்கள் மின்விளக்குகளை சுத்தம் செய்யுங்கள். ஒளிபயன்பாட்டிற்க்கு பல மின்விளக்குகள் தேவைப்படுவதை இதன்மூலம் குறைக்க முடியும்.
- 10 வருடங்களுக்கும் மேலாக மின்பயன்பாட்டில் உள்ள மின்சாதனங்களை நீக்குவதை அல்லது திருத்துவதை உறுதிப்படுத்துவதன் மூலம் நீண்ட கால சேமிப்பினை அனுபவிக்கலாம்.
- சூரிய ஆற்றல் மூலம் பலன்பெறும் மின் பாவனைக்கு மாற்றுங்கள். இதன் ஆரம்பகால முதலீடு பெரிதென்றாலும் நீண்டகாலத்தில் அது சேமிப்பையே தரும்.
- குளிர்சாதன பெட்டியை அடிக்கடி திறப்பதை தவிர்த்திடுங்கள்.
- குளிர்சாதனப்பெட்டியில் சமைத்த உணவை வைக்கும் முன்பு, அறை வெப்பநிலையில் சிறுதுநேரம் குளிர்ச்சியடைய அனுமதிக்கவும்.
- ஒரு சமயத்திற்கு ஒன்று அல்லது இரண்டு ஆடைகளை மின் அழுத்தி மூலம் அயர்ன் செய்வதைக் காட்டிலும், வாரத்தின் ஒரு நாளில் அந்த வாரத்திற்கான ஆடைகளை மொத்தமாக அயர்ன் செய்வது மின்சாரத்தை சேமிக்க உதவலாம். மேலும் ஆடையின் ஈரலிப்பு தன்மை நன்றாக காய்ந்திருப்பதை உறுதிசெய்துகொள்ளவும். ஈரமான ஆடையை அயர்ன் செய்ய அதிக மின்பாவனை தேவைப்படும்.
- தரையில் அல்லது மேசையில் வைத்து பாவிக்கும் மின்விசிறியை விடவும் சீலிங் மின்விசிறிகள் அதிக மின்சாரத்தை விரயம் செய்கின்றன .
- உங்கள் அறையில் குளிரூட்டும் சாதனம் பொருத்தப்பட்டிருப்பின், அறையின் எல்லாப் பகுதிகளும் முறையாக மூடப்பட்டுள்ளதா என பார்வையிடவும்.
- குளிரூட்டும் சாதனம் பொருத்தப்பட்ட அறையின் உள்ளே வெப்பத்தை வெளிப்படுத்தும் மின்உபகரணங்களை பயன்படுத்துவதை தவிர்த்திடுங்கள். உதாரணம் : மின் அழுத்தி, மைக்ரோவேவ் ஓவன், போட்டோகொப்பி மெஷின்.
- மின்கேத்தல் கொண்டு கொதிக்க வைத்த நீரை பிளாஸ்கிற்கு மாற்றுவதன் மூலம், மீண்டும் மின்பாவனைக்கு உட்படுத்துவதை தவிர்க்கலாம்.
- அறையை குளிரூட்டும் மின் சாதனத்தை 26 பாகை C செல்சியஸில் வைத்து பயன்படுத்தவும். அதைவிட நீங்கள் குறைக்கும் ஒவ்வொரு பாகைக்கும் 4% மின்சாரம் கூடுதலாக விரயமாகும்.

நீரினை சேமிக்கும் வழி

உங்களுக்குத் தெரியுமா ?

ஒரு செக்கனுக்கு ஒரு துளி வீதம் நீர் கசிந்தால், வருடத்திற்கு 10,220 லீற்றர் அளவு விரயமாகிறது எனக் கணிக்கலாம்.

- நீர்க் கசியும் பழுதடைந்த குழாய் மற்றும் பைப்புகள்தான் அதிகப்படியான நீர் விரயத்திற்கு காரணமாகிறது. அவற்றை உடனடியாகத் திருத்தி சரிபார்க்கவும்.
- முகச்சவரம் அல்லது பல்துலக்கும் போது நீர்க்குழாயை திறந்தே வைத்திருப்பதை தவிர்த்திடுங்கள்.
- செடிகளுக்கு நீர்ப்பாய்ச்சும் போது ஹோர்ஸ் பைப்புகளைக் காட்டிலும் நீர் வாளியைப் பயன்படுத்தவும்.
- மரக்கறி மற்றும் பழங்களைக் கழுவுவதற்கு ஓடும் குழாய் நீரைத் தவிர்த்து சிறு கோப்பைகளில் அல்லது கிண்ணங்களில் நீரை எடுத்து பயன்படுத்தவும்.
- கழிப்பிடத்தின் நீர்த் தொட்டியில் 1 லிட்டர் போத்தலில் நீர் வைத்து பயன்படுத்தினால். பிளஷ் செய்கையில் நீரின் உபயோகத்தை 1 லிட்டர் அளவிற்குள் வைத்திருக்க உதவும்.

நீரினை சேமிக்கும் வழி

- மழை நீரை வாளிகளில் சேமித்துவைத்து, செடிகளுக்கு நீர்ப்பாய்ச்சிட பயன்படுத்தலாம்.
- ஒரே சமயத்தில் ஆடைகளை மொத்தமாக சலவை செய்து நீரையும் மின்சாரத்தையும் சேமிக்கலாம்.
- ஷவர்களில் குளிக்கும் சமயம் நீர்க்கசிவினால் நாளொன்றுக்கு 5லீற்றர் வரையில் விரயமாகலாம். இதை சரிசெய்ய உடனடி நடவடிக்கை எடுக்கலாம்.
- ஆடை சலவைக்கு பயன்படுத்திய நீரைக் குளியலறையினைக் கழுவுவதற்கு பயன்படுத்தலாம்.
- எச் சந்தர்ப்பத்திலாவது குழாய் நீர் வீண்விரயமாவதை கண்டால் உடனடியாக அதை சரிசெய்ய முற்படவும்.

எரிபொருளை சேமிக்கும் வழி



உங்களுக்குத் தெரியுமா ?

இப்போதிருக்கும் இதே விகிதத்தில் எரிபொருள் நுகர்வு தொடர்ந்தால், புதைந்துள்ள எரிபொருள் கனிமங்கள் 2050 ஆம் ஆண்டளவில் தீர்ந்துபோகும் சாத்தியமுள்ளது.

- பயணங்களை முன்கூட்டியே திட்டமிட்டு அவசியமற்ற பயணங்களை தவிர்த்து, தேவை எனக் கருதும் பயணங்களை மாத்திரம் மேற்கொள்ளலாம்.
- போக்குவரத்து நெரிசலான நேரங்களில் பயணிப்பதை தவிர்க்கலாம்.
- நீண்ட காத்திருப்பின் போது எஞ்சினை நிறுத்திவைக்கலாம்.
- வாகனத்திலுள்ள அவசியமற்ற சுமையை நீக்கிவிடவும். அதிகப்படியான ஒவ்வொரு 90kg சுமையும் உங்கள் எரிபொருளின் 1km தூரத்தை எடுத்துக்கொள்கிறது.
- ஷாப்பிங் செல்ல அடிக்கடி பயணிப்பதை தவிர்த்துவிட்டு, முன்கூட்டிய திட்டமிட்டலுடன் ஒரே சமயத்தில் வாரத்திற்கு தேவையான மொத்தத்தையும் ஒரே பயணத்தில் வாங்கிவரலாம்.
- பயணத்திற்கு உகந்த அளவில் உங்கள் டயரில் காற்றழுத்தம் சரியாக உள்ளதா எனப் பரீட்சித்து பார்க்கவும். டயரின் காற்றழுத்தம் 4-5 PSI அளவிற்கு குறையும்போது எரிபொருள் பயன்பாடு 10%ஆல் அதிகரிக்கும்.
- வாகனத்தை சராசரியாக 55 km/h எனும்வேகத்திற்கு மட்டுப்படுத்தி செலுத்துவதன் மூலம், 10-15% எரிபொருள் பாவனையை சேமிக்கலாம்.
- 2-3km தூர பயணங்களை முடியுமானவரை நடைபயணம் மூலம் சென்றுவர முயற்சிக்கலாம். அது உங்கள் உடல் ஆரோக்கியத்திற்கும் உதவும் (2-3km எல்லையை மீறிய தூரத்தை கூட நடக்கும் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் நடைபயணம் செய்யுங்கள்.) 5-10km தூரத்திற்கு பொதுப் போக்குவரத்தை பாவிக்கலாம்.
- மாதாந்தம் நீங்கள் எரிபொருளுக்கு செலவிடும் தொகையை குறித்து வைத்து எதிர்வரும் மாதங்களில் அச்செலவை குறைக்க முடியுமா என முயற்சிக்கலாம்.

சுற்றுச் சூழலை சேமிக்கும் வழி

உங்களுக்குத் தெரியுமா ?

சுற்றுச்சூழல் மாசுபாடு காரணமாக ஒவ்வொரு ஆண்டும், 5 வயதிற்குட்பட்ட 3 மில்லியன் குழந்தைகள் இறந்துபோகிறார்கள்.

- உங்கள் வீடு, கழிப்பறை, அல்லது வடிகால்கள் ஆகியவற்றிலிருந்து வெளியேறும் கழிவுநீரானது நீரோடைகள் மற்றும் ஏரிகளுக்குள் சென்று கலப்பதை அனுமதிக்காதீர்கள்
- பொலித்தீன் பயன்முறையினைக் குறைத்து குறைந்தபட்சம் மறுசுழற்சி செய்ய முயற்சி செய்யுங்கள். வாரம் ஒரு முறை உங்கள் வீட்டையும் தோட்டத்தையும் சுத்தம் செய்யவும். நீர் தேங்கியிருக்க மற்றும் கொசுக்கள் இனப்பெருக்கம் செய்ய எதுவாக அமையக்கூடிய இடங்களை அப்புறப்படுத்தி சுத்தம்செய்யுங்கள்.
- பிளாஸ்டிக் போத்தல்களைப் பயன்படுத்துவதை குறையுங்கள். மீள உபயோகிக்கக்கூடிய கண்ணாடிக் குவளைகளை/போத்தல்களைப் பயன்படுத்துங்கள்.
- பொலித்தீன் பைகள் இடத்தில் நீடித்து பயன்தரும், மறுபயன்பாட்டுக்குரிய துணியாலான பைகளைப் பயன்படுத்தவும்.
- மதிய உணவை எடுத்துச்செல்ல சாதாரண பொலித்தீன் தாள்களுக்குப் பதிலாக விரைவில் உக்கக்கூடிய தாள்களைப் பயன்படுத்தவும்
- சுற்றுச்சூழல் தூய்மைப்படுத்தல் நிகழ்வுகளை ஏற்பாடு செய்யவும் அல்லது அத்தகைய நிகழ்வுகளில் தன்னார்வத் தொண்டராகப் பங்களிப்பினை வழங்கலாம்.
- காகிதங்களில் அச்சிடப்படும் பில்களுக்குப் பதிலாக டிஜிட்டல் பதிவுகளை பேணுவதற்கு முயற்சி செய்யவும்.
- பொது இடங்களில் சிறிய அளவிலேனும் கூட குப்பை கொட்டுவதை தவிர்க்கவும். முடிந்தவரை எப்பொழுதும் மக்குதல் மூலம் உரமாக்கிய பின்னர் கழிவுகளை அப்புறப்படுத்துங்கள்.
- சூழல் மாசடைதலுக்கு வழிவகுக்கும் உங்களது தனிப்பட்ட பழக்கவழக்கங்களை இனங்கண்டு அவற்றை திருத்திக் கொள்ள முயலவும்.
- மறுசுழற்சி செய்வதற்கு உகந்த விதத்தில் குப்பை கழிவுகளை வேறுபடுத்தவும்.
- ஏதேனும் குப்பை கழிவொன்றினை அகற்றுவதற்கு முன்பு, அது மாற்றுப் பயன்களைக் கொண்டிருக்குமா எனக் கவனியுங்கள்
- உங்களது உடமைகளை கவனமாகப் பராமரிப்பதன் மூலம் அவற்றின் ஆயட்காலத்தினை அதிகரிக்கச் செய்ய முடியும்.
- சிங்கப்பூரின் நிலக் கழிவு முகாமைத்துவமானது, முறையான கழிவகற்றல் மூலம் தனிப்பட்ட ரீதியிலும் நாட்டிற்கும் கிடைக்கப் பெறக்கூடிய நன்மைகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.
- காகிதக் கழிவுகளை அகற்றுவதற்கு முன், ஒவ்வொரு சாத்தியமான மாற்றுப் பயன்பாட்டினையும் கருத்திற் கொள்ளவும்.
- எல்லாவிதமான கழிவுப்பொருட்களுக்கான மாற்று / படைப்பாற்றல் பயன்பாடுகளையும் கருத்திற் கொள்ளவும்.. உ+ம் பழைய டயர்களை பூந்தொட்டிகளாகப் பயன்படுத்தல்

வளி மாசடைதலைத் தடுத்தல்

- உங்களது வாகனங்களின் இயந்திரங்களை அவ்வப்போது பழுதுபார்ப்பதன் மூலம் அதிகமான வாகனப்புகை உமிழ்வைக் குறைப்பதற்கு முடியும்.
- பிளாஸ்டிக், இறப்பர், பொலித்தீன் ஆகியவற்றை எரியூட்டுவதைத் தவிர்க்கவும்
- உங்கள் குளிர்சாதனப் பெட்டிகளையும் குளிரூட்டிகளையும் CFC அற்ற பயன்பாட்டுக்கு மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். இந்த மின் உபகரணப் பொருட்களை வாங்கும் போது CFC இனைக் கருத்திற்கொள்ளவும்.
- சிறந்த ஒட்சிசன் உமிழ்விற்காக அதிக மரங்களை வளர்க்கவும்
- புதிய வாகனமொன்றை வாங்கும் போது, வளி மாசடைதலைக் குறைக்கும் வகையிலான ஹைபிரிட் அல்லது மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களை கருத்திற்கொள்ளவும்.
- புகைபிடித்தலைத் தவிர்த்தல் உங்களைச் சுற்றியுள்ள சூழலைப் பாதுகாக்க உதவுகிறது.

நீர் மாசடைதலைத் தடுத்தல்

- நீர்நிலைகளில் கழிவுகளைக் கொட்டுவதை நிறுத்தவும்.
- பொலித்தீன் மற்றும் இதர வகையான கழிவுப்பொருட்களை கடலுக்குள் கொட்டுவதைத் தவிர்க்கவும். அவை கடற் சூழலை அழிவுக்குள்ளாக்குகின்றன.
- நீர்நிலைகளைச் சூழவுள்ள பிரதேசங்களில் புதிய கட்டுமானங்களை மேற்கொள்வதைத் தவிர்க்கவும்.
- நீர்நிலைகளில் சலவை செய்வதை அல்லது வாகனங்கள் கழுவுவதைத் தவிர்க்கவும்.
- சதுப்பு நிலப்பிரதேசங்களைப் பாதுகாப்பதன் மூலம் உயிரினப் பல்வகைமை பேணப்படுவதுடன், கடல் நீரானது நன்னீருடன் கலத்தல் தடுக்கப்படுகிறது.
- மோட்டார் படகுகளைப் பயன்படுத்தததுதல் நீர் மாசடைதலுக்கு வழிவகுப்பதால், இயன்றவரை அநாவசியமான மோட்டார் படகுப் போக்குவரத்தினைக் குறைப்பதுடன், படகுகள் முறையாகப் பராமரிக்கப்படுவதை உறுதிப்படுத்தவும்.

தொலைபேசி செலவுகளை சேமிக்கும் வழி

உங்களுக்குத் தெரியுமா ?

கைப்பேசிகளில் 49% ஆனவை கேம்ஸ் விளையாடவும், 30%ஆனவை சமூக வலைத்தளங்களை பிரவுஸ் செய்வதற்கும் பயன்படுத்தப்படுகின்றன.

- தொலைத்தொடர்பு சேவை வழங்குனரைத் தெரிவு செய்யும் போது, உங்களுக்கு மிகவும் பொருத்தமான குறைந்த கட்டண பக்கேஜினை தேர்ந்தெடுக்கவும்.
- நேரடி தொலைபேசி அழைப்புகளுக்குப் பதிலாக, Whatsapp மற்றும் Viber போன்ற சமூக வலையமைப்புகள் மூலமான அழைப்புகளைப் பயன்படுத்தவும்.
- அதிகமான தொலைபேசி செலவினங்களைத் தவிர்க்க கட்டண வரம்பொன்றை வைத்துக்கொள்ளவும்.
- அவசர நிலைமைகளைத் தவிர, Off-peak நேரங்களில் தொலைபேசி அழைப்புகளை மேற்கொள்ளவும்.
- வசதியேற்படும் போதெல்லாம் Wi-Fi இணைப்பைப் பயன்படுத்தவும்.

- System அல்லது App இற்றைப்படுத்தல்கள் (update) தானாகவே நிகழும்போது, மொபைல் Data பயன்பாட்டினைக் குறைக்கும் வகையில் settings இனை மாற்றவும்.
- இணைய பாவனைக்கு Data பக்கேஜினை பயன்படுத்தவும்.
- இயன்றவரை குடும்ப அல்லது அலுவலக பக்கேஜினை பயன்படுத்தவும். இதன் மூலம் நீங்கள் வழக்கமாக மேற்கொள்ளும் அழைப்புகளுக்கு குறைந்த கட்டணமே அறவிடப்படும்.

உடல் ஆரோக்கியத்தை சேமிக்கும் வழி

உங்களுக்குத் தெரியுமா ?

வாய்விட்டு சிரிப்பதன் மூலம் மன அழுத்தம் மற்றும் மனக் கவலைகள் குறைவதுடன், 10-40 வரையான கலோரிகள் எரிக்கப்படுகின்றன

- நடைபயிற்சி, ஓடுதல், விளையாட்டுகள் மற்றும் உடற்பயிற்சியில் ஈடுபடுவதன் மூலம் உடலாரோக்கியம் மேம்படுவதுடன், மருத்துவ செலவினங்களும் குறைவடைகின்றன
- மதியம் 1-4 மணிவரையான காலப்பகுதியில் 10-15 வரை நிமிடங்கள் உறங்குவது உங்கள் ஆரோக்கியத்திற்கு நன்மை பயக்கும்.
- மதுபாவனையைத் தவிர்த்திடுங்கள்.
- உங்களது வழமையான துயில் கொள்ளும் /எழும்பும் நடைமுறையினை வார நாட்களில் மட்டுமின்றி வார இறுதி நாட்களிலும் கடைப்பிடிக்கவும்.
- காலையில் எழுந்தவுடன், 2 குவளை தண்ணீர் குடிக்கவும். இது உங்களது உட்புற உடல் செயல்பாடு சீராக உதவுகிறது. சராசரியாக ஒரு நாளுக்கு 3 லீற்றர் தண்ணீர் குடிப்பது பரிந்துரைக்கப்படுகிறது.
- குறைந்தது ஒரு அவுன்ஸ் பழச்சாறு உள்ளடங்கிய சமநிலையான உணவு வேளையினை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்
- உடல் ஆரோக்கியத்திற்கு உள ஆரோக்கியம் இன்றியமையாததாகும். எனவே, இசையை செவிமடுக்க மற்றும் மன தளர்வுக்கு உதவும் பயிற்சிகளை மேற்கொள்வதற்கு சில மணி நேரங்களை ஒதுக்குங்கள்.

உணவினை சேமிக்கும் வழி

உங்களுக்குத் தெரியுமா ?

ஒவ்வொரு ஆண்டும், உலகளவில் 1.3 பில்லியன் டொன் உணவு வீணடிக்கப்படுகிறது.

- தேவைக்கு அதிகமாக உணவுப் பண்டங்களை வாங்குவதைத் தவிர்க்கவும்.

- ஒவ்வொரு மாதமும் உங்கள் குடும்பத்தில் தனிநபரொருவருக்காகத் தேவைப்படும் சராசரி உணவு அளவினைக் கணக்கிடுவதன் மூலம் உணவுப் பண்டங்கள் வீணடிக்கப்படுவதைத் தவிர்க்கவும்.

- உணவுப் பண்டங்களை முறையாகக் களஞ்சியப்படுத்தவும்.

- உணவுப் பண்டங்கள் கெடாமல் பேணுவதற்கான புதிய வழிகளைக் கைக்கொள்ளவும்.

- எப்போதும் புதிய காய்கறி மற்றும் பழங்களை வாங்க முயற்சி செய்யுங்கள். நீடித்த காலாவதித் திகதியுடைய உணவுப் பண்டங்களை வாங்குவதன் மூலம் பணம் மீதப்படுத்தப்படுவதுடன், உணவு வீணாதலும் குறைவடைகிறது

- உங்கள் குளிர்சாதனப் பெட்டியில் உணவை சேமித்து வைக்கும் போது, காலாவதியாகும் உணவுப் பண்டங்களை திகதியடிப்படையில் முன்வரிசையில் அடுக்கி வைப்பதன் மூலம் உணவு விரயமாதல் தவிர்க்கப்படுகிறது.

- மீதமான உணவுப் பண்டங்களை முறையாக சேமிக்கவும்.

- காய்கறிகள் மற்றும் கனிதரும் மரங்களை நடுவது நீண்ட காலத்தில் பயன் தரும்.

- சமையல் செய்யும்போது உங்கள் படைப்பாற்றலைப் பயன்படுத்தவும். உ+ம் எஞ்சிய காய்கறிகள் மற்றும் பழங்களிலிருந்து சாலட் தயாரித்தல்.

- மீதமுள்ள உணவை வீணாகக் கொட்டுவதை தவிர்த்து, உணவு தேவைப்படும் நபருக்கு அல்லது பிராணிகளுக்கு வழங்க முயற்சிக்கவும்.

நேரத்தை சேமிக்கும் வழி

உங்களுக்குத் தெரியுமா ?

ஒரு நபரின் வாழ்நாளில் மூன்றிலொரு பங்கு தூக்கத்தில் கழிகிறது

- நீங்கள் எவ்வாறு உங்கள் நேரத்தை செலவிடுகிறீர்கள் என்பதைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். உங்களது நேரம் வீணாகக் கழியும் வழிகளை அடையாளங்கண்டு அவற்றைத் திருத்திக் கொள்ளுங்கள்.
- கால அட்டவணைக்கு அமைய நடந்துகொள்வதன் மூலம் மூலம் சிறப்பான நேர முகாமைத்துவத்திற்கு வழியேற்படுகிறது.
- நாட்குறிப்பொன்றினை பயன்படுத்துவதன் மூலம், உங்களது கடந்த கால மற்றும் எதிர்கால நிகழ்வுகள் தொடர்பில் அவதானமாக இருக்க முடிகிறது.
- தேவையான பொருட்களை உரிய இடத்தில் வைப்பதன் மூலம் அவற்றைத் தேடுவதற்கான நேரம் சேமிக்கப்படுகிறது.
- ஒரு கருத்துக்கணிப்பின் படி, ஒரே சமயத்தில் பல்வேறு வேலைகளை மேற்கொள்ளும் திறனானது உங்கள் நேரத்தில் 40% வரை சேமிப்பதற்கு உதவுவதாக நம்பப்படுகிறது. ஒவ்வொரு பணியையும் முடித்துவிட்டு காலந்தாழ்த்தாது அடுத்த பணிக்கு நகர்வதன் மூலம் நேரம் மீதப்படுத்தப்படுகிறது.

- பணியினை குறித்த நேரத்துக்குள் முடிக்காது தள்ளிபோடுவதைத் தவிர்க்கவும்.
- உங்களது பணிகளை விரைவாக முடிக்கவும் நேரத்தை வினைத்திறனான முறையில் பயன்படுத்துவதற்கும் உகந்த நாளாந்த நடைமுறையொன்றைக் கடைப்பிடிக்கவும்.
- வாசிப்பினைப் பழக்கமாக்கிக் கொள்வதன் மூலம் (புத்தகம் அல்லது தொலைபேசி வாயிலாக வாசித்தல்) நீங்கள் வரிசையில் அல்லது பயணத்தில் காத்திருக்க வேண்டிய நேரத்தினைப் பயனுள்ளதாக்கிக் கொள்ளமுடியும்.
- 5-6 மணிநேர தூக்கத்தினை வழக்கமாக்கிக் கொள்வதன் மூலம் உங்களது அலுவல்களை முடிப்பதற்கு போதுமான நேரம் கிடைக்கப்பெறுகிறது.
- ஏற்கனவே இழந்த நேரத்தை குறித்து வருந்துவது இன்னும் அதிக நேரத்தை வீணடிக்கும்.
- நேரம் பொன்னானது. அதனை விரயமாக்க வேண்டாம்.

பணத்தினை சேமிக்கும் வழி

உங்களுக்குத் தெரியுமா ?

புதிய தலைமுறையினரில் 46% ஆனோரிடம் சேமிப்பு இருப்புகள் இல்லை

- உங்களது செலவினங்களைப் பட்டியலிடுவதன் மூலம், எதிர்காலத்தில் அநாவசியமான செலவுகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

- ஒவ்வொரு மாதமும் வீட்டுக்குத் தேவையான மளிகைப் பொருட்களை பட்டியலிட்டு ஒரே தடவையில் வாங்குவதன் மூலம், மொத்தக் கொள்வனவுக்கான விலைத் தள்ளுபடிகளைப் பெற முடியும்.

- உங்கள் மாத வருவாயில் குறிப்பிட்ட ஒரு பகுதியை வங்கியில் வைப்பிலிடுங்கள்.

- கட்டணங்களை உரிய நேரத்தில் செலுத்துவதன் மூலம் தாமதக் கொடுப்பனவுக்கான வட்டியினைத் தவிர்க்க முடியும்.

- எப்போதும் தரத்திற்கு முன்னுரிமையளியுங்கள். தரமான பொருட்கள் நீண்ட காலத்துக்கு நீடித்துழைக்கும்.

- பரிசுகளை வாங்குவதைத் தவிர்த்து சொந்தமாக அவற்றை வடிவமைத்து உருவாக்குங்கள். இதன் மூலம் பணம் மீதப்படுத்தப்படுவதுடன், உங்களது பரிசுக்கான மதிப்பும் அதிகரிக்கிறது.

- ஒவ்வொரு நாளும் ஒரு சிறிய தொகையையேனும் சேமிக்கவும். இது மாத இறுதியில் கணிசமான சேமிப்புக்கு வழிவகுக்கும்.

- ஒன்லைன் மூலமான ஓர்டர்களை மேற்கொள்வதற்கு முன் 48 மணி நேரம் காத்திருக்கவும். குறித்த ஓடர் உண்மையில் அவசியமானதா இல்லையா என்பதை முடிவு செய்வதற்கு இந்த இடைப்பட்ட காலப்பகுதி உதவும்.

- கைத்தொலைபேசியில் நிதி முகாமை தொடர்பான App ஒன்றினைப் பயன்படுத்துவதன் மூலம், உங்களது வருமானம் மற்றும் செலவினங்களை திறம்பட நிர்வகிக்க முடிவதுடன், செலவினங்களைத் தொடர்ச்சியாக கண்காணிக்கவும் முடிகிறது.

- தேவைகளிலிருந்து விருப்பங்களை வேறுபடுத்துவதன் மூலம், உங்கள் செலவினங்களைக் கட்டுப்படுத்த முடியும்.

- உங்கள் வருமானத்திற்கு ஏற்ப பொறுப்புடன் செலவினங்களை மேற்கொள்ளுங்கள்.

சேமிப்பு என்பது பணத்தை சேமிப்பது மட்டுமே என கருதமுடியாது. ஆகவேதான் எதிர்காலத்திற்கும் நமக்கும் மட்டுமின்றி நாளைய சந்ததிக்கும் சேர்த்தே சேமிக்க வேண்டியது அவசியமாகிறது. நீங்கள் சேமிக்கும் போது நீங்கள் மட்டுமின்றி உங்கள் தேசமும் அதன்மூலம் பலன்பெறுகிறது என்பதை அறிவீர்களா? சேமிப்பு என்பது தனிப்பட்ட கடமை என்பதோடு தேசத்திற்காக ஆற்றும் கடமையாகவும் மாறுகிறது. உங்கள் சேமிப்பு உங்களுக்கு உடனே பலன்தரலாம், இல்லையென்றாலும் நீண்ட காலம் கழித்தும் பலன் தரலாம். நீங்கள் வைக்கும் ஒவ்வொரு சின்ன அடியும் மிகப்பெரிய பயணத்தின் ஆரம்பமாகவே அமையும். உங்களுக்கு கிடைக்கும் வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு நாளிலும் சேமிப்பை தொடருங்கள்.

எனவே சேமிப்பு என்பதை சிறிது சிறிதாக நிகழ்த்தினாலும் அது பின்னாளில் மாபெரும் ஒன்றாக மாறி உங்களையோ அல்லது உங்களை சார்ந்த ஒருவரையோ வந்தடையும் என்பது உறுதி.

இந்தக் கையேட்டை இன்னுமொரு நண்பருக்கு கையளிக்கையில் உறுதியான சேமிப்பிற்காக நீங்கள் பின்பற்றிய புதிய வழிமுறைகளை குறிப்பிட்டு கையளிக்கலாம்.

----

3 இலக்குகளை நிர்ணயித்தல் மற்றும் அவற்றை நோக்கிச் செயற்படுதல்

இதுவரை உங்கள் வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் நீங்கள் எவ்வாறு சேமிப்பது என்பதைப் புரிந்துகொண்டிருப்பீர்கள். இனி உங்கள் முன்னேற்றத்தை எப்படிக் கண்காணிக்க முடியும் என்பதைப் புரிந்துகொள்வோம்.

SMART இலக்கு முறையானது, உங்கள் இலக்குகளைத் தெளிவாக வரையறுக்கவும் மற்றும் அவற்றை அடைவதற்கு உங்கள் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும் உதவும் சிறந்ததொரு செயல்முறை ஆகும். உங்கள் இலக்குகள் SMART ஆவதற்கு, அது பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டும்: திட்டவட்டமானவை, அளவிடக்கூடியவை, அடையக்கூடியவை, தொடர்புடையவை மற்றும் நேர வரையறைக்குட்பட்டவை.

அளவிடக்கூடியவை
Measurable

உங்கள் இலக்கை அளவிடுவது உங்கள் முன்னேற்றத்தை கண்காணிக்க உதவுகிறது. இதன்மூலம், நீங்கள் ஒரு குறிப்பிட்ட மைல்கல்லை அடைந்துவிட்டீர்கள் என்பதையோ அல்லது அதை நீங்கள் அடையாதபோது மறுபரிசீலனை செய்யவோ முடியும்.

உ+ம். ஒரு காரை வாங்குவதற்கு ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் நீங்கள் ஒவ்வொரு மாதமும் எவ்வளவு சேமிக்க வேண்டும் என்பதை முடிவு செய்யுங்கள்.

திட்டவட்டமானவை
Specific

தெளிவாக மற்றும் சுருக்கமாக உங்கள் இலக்குகளை வரையறுக்கவும். திட்டமிட்டு செயல்படும் இலக்குகளே சிறப்பான இலக்குகளாகும்.

உ+ம். உங்களுக்கு ஒரு கார் தேவை. உங்கள் குடும்பத்திலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இரண்டாம் பாவனைக்குரிய காரைப் பெறுவதில் கவனம் செலுத்துங்கள்

அடையக்கூடியவை - **Attainable**

நீங்கள் அடைய முடியா இலக்குகளை நிர்ணயிக்கும் பொறிக்குள் சிக்கிக் கொள்ளாதீர்கள். நீங்கள் ஒரு இலக்கை அமைக்க முன், அதை நீங்கள் உண்மையில் அடைந்து விட்டதை அல்லது சாதித்துவிட்டத்தை போல கற்பனை செய்ய முடிகிறதா என உறுதிசெய்துகொள்ளுங்கள். அது நடைமுறையில் சாத்தியமாகுமா என்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.

உ+ம். ஆடம்பர கார் ஒன்றை வாங்குவதை விடவும் இரண்டாம் பாவனைக்கு உகந்த காரை வாங்கமுடியும் என்பது நடைமுறைக்கு சாத்தியமாகும்.

தொடர்புடையவை **Relevant**

நீங்கள் அடைய முயலும் இலக்கானது, உங்களது நீண்டகால குறிக்கோளுடன் தொடர்புபட்டிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். பணத்தை சேமிக்கும் நீண்ட காலத் திட்டத்துடன் உங்கள் சேமிப்பு இலக்குகள் சீராகத் தொடர்புபட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்தவும்.

உ+ம். காரொன்றை வாங்குவது உங்களது நீண்டகாலக் கனவு என்றால், உங்கள் சேமிப்பு இலக்கு அதனுடன் பொருந்த வேண்டும். எனவே, நிலையான வைப்பொன்றில் உங்கள் சேமிப்புகளை முதலீடு செய்யலாம்.

நேர வரையறைக்குட்பட்டவை **Time Bound**

சிறந்த இலக்குகள் காலவரையறைக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

உ+ம். 'சொந்தமாகக் காரொன்றை வாங்க வேண்டும்' என்று சொல்வதற்குப் பதிலாக 'அடுத்த ஆண்டு இறுதிக்குள் என் முதல் காரை வாங்க முடியும்' என்று நீங்கள் கூறலாம். இது உங்கள் இலக்கினை அடைவதற்கான கால எல்லையொன்றை வரையறுக்க உதவுகின்றது.

4 திறனில் தேர்ச்சியடைதல்

இப்போது உங்களிடம் சேமிப்பு குறித்த அடிப்படை திறமையொன்று இருக்கிறது. உங்கள் சேமிப்பகத்தின் ஒரு பகுதியை எவ்வாறு முதலீடு செய்து பயன்படுத்தலாம் என்பது பற்றியும் தெரிந்துகொள்ளுங்கள்.

?
உங்களுக்குத் தெரியுமா

இப்போது உங்களிடம் சேமிப்பு குறித்த அடிப்படை திறமையொன்று இருக்கிறது. உங்கள் பணத்தை முதலீடு செய்வது அதிக பணம் சம்பாதிப்பதற்கு உதவும். மிகவும் வெற்றிகரமான மனிதர்கள் பலரும் முதலீட்டின் ஊடாக செல்வத்தை சம்பாதித்தவர்களாகவே இருக்கின்றனர்.

முதலீடு என்பது நேரம் மற்றும் முயற்சி என்பவற்றுடன் தொடர்புபட்டது.

முதலீடு செய்ய பல வழிகள் உண்டு. - பங்குகள், பத்திரங்கள், பரஸ்பர நிதிகள், சொத்து அல்லது உங்கள் சொந்த வியாபாரத்தைத் தொடங்குதல் போன்றவை.

முதலீடு குறித்த ஏராளமான தகவல்களை இணையதள பக்கங்களின் ஊடாக தெரிந்து கொள்ளமுடியும்

முதலீடுகள் சவால்கள் நிறைந்தது. ஆனால் பணம் சம்பாதிக்கவும் சேமிக்க வும் கற்றுக்கொண்டால் உங்கள்வசம் ஒரு மூலோபாயம் இருந்தால், நீங்களும் பணம்படைத்தவராக வலம்வர முடியும்.

மத்திய வங்கியின் அனுமதி பெற்ற நிதி நிறுவனங்களில் மாத்திரம் நீங்கள் முதலீடு செய்வதை உறுதிப்படுத்திக் கொள்ளவும். பொதுவாக ஏனைய நிதி நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில், வங்கிகள் சிறந்த தெரிவாக அமைகின்றன.

5 பிறர் பயனுற உதவி செய்தல்

கற்பித்தலே கற்றலுக்கான சிறந்த வழிமுறையாகும். எனவே, உங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், உங்கள் நண்பர்களிடம் நீங்கள் கற்றுக்கொண்ட விடயங்களைப் பகிர்ந்துகொள்ளுங்கள்.

நீங்கள் செய்யக் கூடியவை

1. சேமிப்பது பற்றி அறிந்துகொள்ள ஆர்வமுள்ள உங்களது நண்பர்கள், அலுவலகப் பணியாளர்கள் உள்ளடங்கலான அனைவருக்கும் இந்தக் கையேட்டினை அறிமுகப்படுத்தல்

2. பதிவிறக்கம் செய்யக் கூடிய இலத்திரனியல் கையேட்டுக்கான e-book link இனைப் பகிர்தல் (இதன் மூலம் காகிதப் பயன்பாடு குறைவடைய வாய்ப்பேற்படுகிறது!)

3. இந்தக் கையேடானது எவ்வாறான சேமிப்பிற்கு உங்களைத் தூண்டியது (நிதி ரீதியான அல்லது வேறுவிதமான) என்பதை எமது இதர வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளல்.

4. வாய்ப்பேற்படும் போதெல்லாம் சேமிப்பு தொடர்பான உங்களது கருத்துகளைப் பகிர்தல்.

5. ஒவ்வொரு பாகத்தின் முடிவிலும் நீங்கள் சொந்தமாகக் கற்றறிந்த வழிமுறைகளை மற்றவருக்கு பயன்படும்படி குறிப்பிடுதல்.

இந்தக் கையேட்டை இன்னுமொரு நண்பருக்கு கையளிக்கையில் உறுதியான சேமிப்பிற்காக நீங்கள் பின்பற்றிய புதிய வழிமுறைகளை குறிப்பிட்டு கையளிக்கலாம்.

சேமிக்கும்
வழி